*1*

# கிறிஸ்து: நமது பிரசங்கங்களுக்கான பொருள்

நடபடிகள் 8:26-40 ஒரு மனிதனைப் பற்றிய பரவசமான கதையைச் சொல்லுகிறது, அவன் தன் வீட்டை விட்டு நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் பயணம் பண்ணுகையில், சுவிசேஷத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்தான். எத்தியோப்பியாவின் மந்திரியாகிய, இந்த மனிதன், அதற்கு முன்பு இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டதில்லை, அவரைப் பற்றி கற்றுக்கொண்டு அவருடைய சீஷனானான். இழந்துபோன இந்த ஆத்துமா ஒரு பிரசங்கத்தைக் கேட்டு, ஞானஸ்நானம் பெற விரும்பிக் கேட்டு, கிறிஸ்தவனானான். அந்தப் பிரசங்கம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருந்திருக்க வேண்டும்! அது அந்த மனிதனின் வாழ்க்கைப் பாதையை மாற்றிப் போட்டது - ஒருவேளை, அவன் மூலமாக, ஒரு நாட்டின் வரலாற்றுப் பாதையே மாறியிருக்கலாம்!

இந்த செய்திக்கு ஒரு மிகைப்படுத்தும் காட்சியைக் கொடுக்காமல், ஏவப்பட்ட எழுத்தாளர் பிரசங்கத்தைக் குறித்த விளக்கமாக எளிய முறையில் குறிப்பிட்டு “பிலிப்பு … வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்” என்று சொன்னார் (நடபடிகள் 8:35). ஒருவேளை பிரசங்கியார்களாகிய நாம் நமது செய்தியின் வல்லமை கிறிஸ்துவில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளவேண்டும்! நாம் அவரைப் பிரசங்கிக்கிற அளவுக்கு, அதிகமான ஜீவியம் மாற்றப் படும், அதிகமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும். பெரும்பாலும், நாம் சிலுவைக்குப் பின்னாக ஒளித்து கொள்வதை விட்டு சிலுவையை நமக்குப் பின்னாக ஒளித்து வைக்கிறோம்.

பிலிப்பு இயேசுவை பிரசங்கித்தார், அவர் சொன்னது என்ன? அவர் பழைய ஏற்பாட்டிலிருந்து துவங்கி வசனத்தைப் பிரசங்கித்தார் என்பது தவிர, வேறு எதுவும் நமக்கு நிச்சயமாகத் தெரியாது:

> அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டு போயிற்று; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்? என்பதே (நடபடிகள் 8:32ஆ, 33; காண்க ஏசாயா 53:7ஆ, 8).

பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியை, வாசித்துக் கொண்டிருந்த மந்திரியினிடத்தில்,

ஏசாயா மேசியாவைப் பற்றி பேசுவதை பிலிப்பு விளக்கமளித்து, இயேசுவே இந்த மேசியா என்றும், தமது சிலுவையிலறையப்பட்ட நிகழ்ச்சியால் அந்தத் தீர்க்கதரிசனத்தை அவர் நிறைவேற்றினார் என்பதையும் எடுத்துச் சொன்னார் என்பதில் சந்தேகமில்லை.

அதற்குப் பிறகு பிலிப்பு என்ன சொன்னார்? நமக்குத் தெரியவில்லை. கீழ்வரும் சுருக்கக் கருத்துக்களைப்போல அநேகமாக இயேசுவின் சரித்திரத்தைச் சொல்லியிருக்கலாம்.

## அவரது பிறப்பு

பெரிய ஏரோதுவின் நாட்களில், பெத்லகேமில் இயேசு பிறந்தார் (மத்தேயு 2; லூக்கா 2). ஒரு கன்னிகையினிடத்தில் பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரிக்கப்பட்டு பிறந்தார். ரோம அரசுக்குட்பட்ட பகுதிகளில் வரி வசூலிக்க ஏதுவாக ரோம சக்கரவர்த்தியால் கட்டளை பெற்று, மரியாளும், அவருக்கு நியமிக்கப்பட்டிருந்த புருஷனாகிய யோசேப்பும் கலிலேயாவிலுள்ள நாசரேத்தை விட்டு பெத்லகேமுக்கு குடிமதிப்பு எழுத வந்திருந்தார்கள். சிறிய பட்டணமாகிய பெத்லகேம் அந்த நேரத்தில் அவர்கள் வந்திருந்தபோது, கூட்ட நெரிசல் மிகுந்திருந்தது, அவர்கள் தங்கி தூங்க இடம் கண்டுபிடிக்க இயலாமல், சத்திரம் காப்பவன் காட்டிய தொழுவத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப் பட்டார்கள். அங்கே இயேசு பிறந்தார், அவருடைய தாயார் அவரை முன்னணையில் கிடத்தினார்.

அவருடைய பிறப்பின் அந்த ராத்திரியில், மேய்ப்பர்கள் இயேசுவைத் தொழுதுகொள்ள வந்தார்கள். பின்னதாக, அவர்கள் குடும்பமாக ஒரு வீட்டிலே குடியேறின போது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்து அவரைத் தொழுது கொண்டார்கள். அவர்கள் ஏரோதுவினிடத்தில் விசாரித்த காரியம் ராஜாவை எச்சரிக்கையடையச் செய்து அவன் குழந்தையை அழித்துப்போட எத்தனம் பண்ணினான், அவனுடைய ஆட்சிக்கு சவால் விடும்படி அவர் பிறந்திருப்பதாக அவன் எண்ணினான். ஆகிலும், தேவன் இயேசுவின் பெற்றோரை எச்சரித்து எகிப்துக்குப் போகும்படி குடும்பத்துக்குக் கட்டளையிட்டார். ஏரோது மரிக்கும் வரை அவர்கள் அங்கே தங்கியிருந்தார்கள்; பிறகு மீண்டும் நாசரேத்திலே வந்து குடியிருந்தார்கள்.

## அவரது பிள்ளைப் பருவம்

இயேசு நாசரேத்திலே வளர்ந்தார். அவர் பன்னிரெண்டு வயதாயிருக்கும் போது, பஸ்கா பண்டிகையை முன்னிட்டு எருசலேமில் தொழுது கொள்ளும் பொருட்டு தன் பெற்றோருடன் சென்றார். யோசேப்பும் மரியாளும் பண்டிகை முடிந்து தங்களுடைய வீட்டிற்குச் செல்லும் வழியில், தங்களோடு கூட பயணம் பண்ணினவர்களில் இயேசுவை காணவில்லை என்று கண்டார்கள். முடிவில் அவரை அவர்கள் தேவாலயத்தில் கண்டு பிடித்தார்கள். அங்கே அவர் கேள்விகேட்கவும் கேள்விகளுக்கு பதில் சொல்லவுமாய் நியாயப்பிரமாணப் போதகர்களிடம் விவாதித்துக் கொன்டிருந்தார். இந்த ஆச்சரியமான செயலைக் குறித்துக் கேட்டபோது, இயேசு பதிலளித்து, “என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?” என்று கேட்டார் (லூக்கா

*2:49ஆ). பிறகு அவர் நாசரேத்துக்குப் போய் யோசேப்புக்கும் மரியாளுக்கும் கீழ்ப்படிந்திருந்தார். அவர் பெலங் கொண்டு மனரீதியாக வளர்ந்தார்; அவருடைய பின்பற்றாளர்களால் நன்கு விரும்பப்பட்டு தமது ஆவிக்குரிய வளர்ச்சியில் ஜாக்கிரதையாக பிரயாசப் பட்டார் (லூக்கா 2:52).*

## அவரது ஞானஸ்நானமும் சோதனையும்

*அவர் முப்பது வயதாயிருக்கும்போது, யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். அவர் ஞானஸ்நானம் பெற்றபின், தேவ ஆவியானவர் புறா வடிவங் கொண்டு அவர்மேல் வந்து இறங்கினார், வானத்திலிருந்து ஒரு சத்தமுண்டாகி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தது (மத்தேயு 3:17).*

*பின்பு இயேசு, பரிசுத்த ஆவியினால், வனாந்திரத்துக்குக் கொண்டு போகப்பட்டார். நாற்பது நாள் அவர் உபவாசம் இருந்த பிறகு, கல்லுகளை அப்பங்களாக்கி புசிக்கும்படியாகவும், தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து கீழே குதிக்கும்படியாகவும், பிசாசைப் பணிந்துகொண்டால் உலகிலுள்ள இராஜ்யங்களையெல்லாம் கொடுப்பதாகவும் பிசாசினால் சோதிக்கப் பட்டார். ஒவ்வொரு முறையும் இயேசு, "இல்லையென்றே" பதிலளித்து "எழுதப்பட்டிருக்கிறது" என்று சொல்லி சோதனைகளை மறுதலித்தார். இவைகளுக்குப் பின்பு, தேவதூதர்கள் அவருக்கு பணிவிடை செய்தார்கள்.*

## அவரது ஊழியம்

பிறகு இயேசுவின் மூன்று வருட ஊழியம் துவங்கியது. அவரது போதனையிலும் ஜனங்களோடு அவர் நடந்து கொண்டவிதங்களிலும் அவர் எப்படிப்பட்ட நபராக இருந்தார் என்றும் இதற்கு முன்பு வாழ்ந்த மற்ற எல்லா போதகர்களைக் காட்டிலும் அவரை வேறுபடுத்திக் காட்டியது எது என்பதையும் நாம் காணுகிறோம்.

*இயேசுவின் அற்புதங்கள்.* இந்த இயேசு அற்புதங்களை நடப்பித்தார். அவரது முதல் அற்புதம் தண்ணீரை திராட்ச இரசமாக்கியது. அவருக்கு எதுவும் கடினமாயிருக்கவில்லை. சில அப்பங்களையும் மீன் துண்டுகளையும் கொண்டு திரளானவர்களைப் போஷித்தார். கொந்தளிக்கும் கடலை அமைதிப்படுத்தினர். தண்ணீர்மேல் நடந்தார். குருடர்களுக்கு பார்வை கொடுத்தார்; முடவர்களை நடக்கவும், செவிடர்கள் கேட்கவும், ஊமையர்கள் பேசவும் செய்தார்; அவர் பிசாசுகளைத் துரத்தினார்; வியாதியஸ்தர்களைக் குணாக்கினார். அவர் குஷ்டரோகிகளையும், பெரும்பாடுள்ள ஸ்திரீயையும், திமிர்வாதக்காரனையும் சுகப்படுத்தினார். மரித்தவர்களைக் கூட அவர் உயிரோடு எழுப்பினார்! குறைந்தது மூன்று பேரையாகிலும் அவர் மரித்தோரிலிருந்து எழுப்பினார்; யவீருவின் மகளையும், உயிரோடு எழுப்பினார்; நாயீன் ஊர் ஸ்திரீயின் மகனுக்கு புத்துயிர் கொடுத்தார்; அவர் மரித்து கல்லறையில் நான்கு நாட்கள் இருந்த, லாசருவை எழுப்பினர். இந்த அற்புதங்களை செய்ததன் மூலம், இயேசு தம்மை அன்புள்ளவராகவும், இரக்கமுள்ளவராகவும், அனுதாபம் உள்ளவராகவும் வெளிப்படுத்தினார். விசேஷமாக, தம்மை தேவனுடைய குமாரன் என்று நிரூபித்தார்! அவருடைய அற்புதங்களெல்லாம் அவைகளைப்

பார்த்தவர்களையும் அவைகளைக் குறித்து வாசிப்பவர்களையும் விசுவாசிக்கச் செய்யும்படி நடந்தன (யோவான் 20:30. 31).

*இயேசுவின் போதனைகள்.* அற்புதங்களைச் செய்யும் ஊழியக்காரராயிருந்ததோடு, இயேசு போதகராகவும் இருந்தார். இதற்கு முன்பு யாரும் போதித்திராத போதனையை அவர் செய்தார். அவருடைய போதனையோடு கூட அவருடைய கிரியைகளும் அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று சாட்சியிட்டது (யோவான் 3:2). அவருடைய வார்த்தைகளை கேட்ட ஜனங்கள், "அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று சொல்ல வைத்தன (யோவான் 7:46). அவருடைய போதனைகள் திரளான ஜனங்களை ஆச்சரியப்பட வைத்து அவர் அதிகாரமுடையவராய் போதிக்கத்தக்கதாக கண்டார்கள் (மத்தேயு 7:28, 29). அவர் தேவனுடைய குமாரனானதால் அவருக்கு அந்த அதிகாரமிருந்தது.

*இயேசுவின் அப்போஸ்தலர்கள்.* அவர் சென்றபின்பு தமது போதனைகளை தொடர்ந்து செய்ய ஏதுவாக்கும் பொருட்டு, இயேசு மற்றவர்களை போதித்து உருவாக்க பெரிதும் பிரயாசப்பட்டார்: அவர் கொலை செய்யப் படுவார் என்பதையும், அவர் அறிந்திருந்தார். ஆகையால், "அப்போஸ்தலர்கள்" என்று பெயரிடப்பட்ட, பன்னிரெண்டு பேரைத் தேர்ந்தெடுத்து, அவர் மாபெரும் நோக்கத்தோடு போதித்து, தம்முடைய பிதாவிடத்திலே போனபின்பு அவரது ஊழியத்தை தொடர்ந்து செய்ய அவர்களை உருவாக்கினார்.

*இயேசுவின் நற்குணம்.* இயேசு நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்தார் (நடபடிகள் 10:38). அவர் நண்பர்களற்றவர்களுக்கு சிறந்த நண்பராக விளங்கினார், பாவிகளிடத்தில் பரிவு காட்டினார், பிள்ளைகளை ஆசீர்வதித்தார், உதவி தேவைப்படும் அனைவருக்கும் அவர் உதவினார். அவர் தம்மைத்தாமே வெறுத்து தமது ஜீவன் உட்பட எல்லாவற்றையும் மற்றவர்களுக்கு அர்ப்பணித்தார்.

*இயேசுவின் மனுஷீகம்.* இயேசு மனுஷனாக இருந்தார். அவர் பெலமுள்ளவராக - பெரிய தொலைவுக்கு நடந்துபோகும் அளவுக்கு பெலனுள்ளவராக இருந்தார். அநேக சிருஷ்டிகளுக்கு கிடைக்கும் அமைதி கூட இல்லாமல் வாழவும், ஒரு நாள் முழுக்க உழைக்கும் திராணியையும் பெற்றிருந்தார். அவர் ஆணையிடும் தோரணையுடையவராக இருந்தார்; அவர் ஒருவரை வா என்று சொன்னால் அவர் *வந்தார்.* யாரையும் போங்கள் என்று சொன்னால், *போனார்கள்.* காசுக்காரர்களை அவர் தேவாலயத்திலிருந்து விரட்டியடித்தார். பரிசேயர்களையும் மாயக்காரரையும் வெளிப்படையாகக் கடிந்து கொண்டார். இயேசு மனுஷனாக இருந்ததோடல்லாமல், ஏழையான மனுஷனாகவும் இருந்தார். தமது பொதுப்படையான ஊழியத்தை துவங்கின பின்பு, அவருக்கென்று ஒரு படகோ, வீடோ, கால் நடையோ இருக்கவில்லை. சொத்துகளைச் சேர்க்க அவருக்கு நேரமிருக்கவில்லை. அவருக்கு இருந்த நேரெமல்லாம், தேவனுடைய ஊழியத்துக்கும் வசனத்துக்குரியதாக மட்டுமே இருந்தது.

*இயேசுவின் தெய்வீகம்.* இயேசு சராசரி மனுஷனுக்கும் மேற்பட்டவர்: அவர் தேவனுடைய குமாரன். அவர் தம்முடைய குமாரன் என்பதை தேவன் அவர் கன்னிகையினிடத்தில் பிறந்ததன் மூலமும், அந்தப் பிறப்பை குறிப்பால் உணர்த்திய நட்சத்திரத்தின் மூலமும், இயேசு ஞானஸ்நானம் பண்ணப்பட்ட

போதும், இயேசு செய்த அற்புதங்கள் மூலமும் அறிவித்தார். இயேசு மறுரூபமான போது, தேவன் பேசி: "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவி கொடுங்கள்!" என்றார் (மத்தேயு 17:5). அவருடைய மரணத்தோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் மூலமாகவும் கூட, தேவன் இயேசுவை தம்முடைய குமாரன் என்று அடையாளப்படுத்தினார்.

## அவரது மரணம்

இயேசு பாவமற்ற வாழ்க்கையை வாழ்ந்தார் மற்றும் தம்மை நல்ல மனிதராக நிரூபித்தார், கடினமான வேலை செய்து நாசரேத்தில் எளிமையான தச்சனாகவும், நம்பிக்கைக்குகந்த நண்பராகவும் விளங்கினார். இவையெல்லாவற்றிற்கும் பின்பு, மூன்று வருஷகாலம் தமது பொதுவான ஊழியத்தில் நன்மை செய்யக் கூடியவராக செலவழித்தபின், அவர் யூதர்களால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இயேசுவின் ஜீவிய காலத்தின் கடைசி வாரத்தில் அவரது வாழ்க்கையின் நிகழ்வுகளின் இசைவேகம் இன்னும் துரிதமாக்கப்பட்டது. கடைசியாக ஒரு கழுதையின் மேல் ஏறி, ''ஓசன்னா'' கீதம் முழங்க திரளான ஜனக்கூட்டத்தின் முன் அவர் எருசலேமில் நுழைந்தார். தமது கடைசி வாரத்தில் மிகுந்த போதனைகளாலும் பிரசங்கங்களினாலும் நிறைத்தார். பிறகு அந்த வியாழக்கிழமை விதி நிறைந்த இரவு வந்தது. பஸ்காவை ஆசரிக்கும்படி அவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் மேலறையில் கூடிவந்தார்கள். அவர்களுடைய கால்களை கழுவியதன் மூலம் தாழ்மைக்கான முன் உதாரணத்தை தெரியப்படுத்தினார். கர்த்தருடைய பந்தி அனுசரிக்க வேண்டிய நியமத்தை நிறுவினார். அப்போஸ்தலர்களில் ஒருவன் தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்பதை முன்னுரைத்த பின், பேதுரு தம்மை மறுதலிப்பான் என்று முன்னுரைத்து, கெத்செமனே தோட்டத்துக்கு அவர் அவர்களுடனே போனார்.

அங்கே அவர் ஜெபித்தார்: "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' (மத்தேயு 26:39). இந்த வார்த்தைகளையே சொல்லி மூன்று முறை ஜெபம் பண்ணினார், பிறகு தம்மை கைது செய்ய வந்த கூட்டத்தாரை சந்திக்கும்படி எழுந்து வந்தார்.

ஒன்றன் பின் ஒன்றாக பல நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. வந்த கூட்டத்தாரிடத்தில் யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுத்தான். அவர் விசாரிக்கும்படி கொண்டு போகப்பட்டார். பிரதான ஆசாரியனுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டபோது, தேவ தூஷணம் சொல்லியதாக பொய்யான குற்றச்சாட்டு அவர்மீது சுமத்தப்பட்டது. கர்த்தரை தனக்குத் தெரியும் என்பதை பேதுருவும் மறுதலித்தான். பின்பு இயேசு முன்னுரைத்ததை நினைவுகூர்ந்து வெளியில் போய் மனங்கசந்து அழுதான். காலை விடிந்தபோது, ஆலோசனை சங்கத்தாரால் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருந்தார்; பின் பிலாத்துவுக்கு முன்பாகக் கொண்டுபோகப்பட்டார். பிலாத்து அவரை விசாரித்தபின், ஏரோதுவினிடத்தில் இயேசுவை அனுப்பிவைத்தான், அவன் அவரை பரியாசம் செய்து, மீண்டும் பிலாத்துவினிடத்தில் அனுப்பினான். இயேசுவின் கபடற்ற தன்மை, பிலாத்துவை உணர வைத்தது, எனவே இயேசுவை விடுதலையாக்க

முயற்சித்தான்; ஆகிலும், யூதர்களின் தூண்டுதலினால், அவன் அவரை விடுதலையாக்கவில்லை. நிகழ்ச்சிகளின் போக்கை மாற்றமுடியவில்லை, அவன் இயேசுவை வாரினால் அடிப்பித்தான், தண்ணீரை எடுத்து தனக்கு உடன்பாடில்லையென்று கைகழுவினான், பிறகு இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புக் கொடுத்தான்.

இயேசு "கொல்கொதா" எனுமிடத்திற்குக் கொண்டுபோகப்பட்டார், அங்கே அவர் சிலுவையில் அறையப்பட்டார், அவரோடு இரண்டு கள்ளர்களும் அறையப்பட்டார்கள். ஆணிகளால் சிலுவையில் அறையப்பட்ட அவர் அதிலேயே மரிக்கும்படி விடப்பட்டார். நேரம் மெதுவாகக் கடந்தது; வலி அவரை பின்னி எடுத்தது, கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் உண்டான துளைகள், அவருடைய தலையில் சூடப்பட்ட முள் கிரீடம், இவைகளால் உண்டான வலி, சிலுவையில் (மரத்தில்) அடிக்கப்பட்ட ஆணிகளில் முழுபாரமும் தொங்கிக் கொண்டிருப்பதால் உண்டாயிருந்த தாங்கமுடியாத வலியால் துடித்துக் கொண்டிருந்த நேரம். வெட்கத்துக்குரிய அந்தக் காட்சியை காண சகிக்காமல் அந்தக் காட்சியை நிராகரிக்க தேவன் ஆகாயத்தை இருளாக்கினார். இறுதியாக, இயேசு சத்தமிட்டு, "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி ஏறத்தாழ உடனடியாக மரித்தார். இயேசுவின் நண்பர்கள் அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்க அனுமதி கேட்டு, ஒரு புதிய கல்லறையிலே அவருடைய சரீரத்தை அடக்கம் பண்ணினார்கள். இயேசுவின் சத்துருக்கள் கல்லறைக்கு முத்திரையிட்டு யாரும் வந்து இயேசுவின் சரீரத்தை திருடிக் கொண்டுபோய் விடாதபடிக்கு காவலர்களை நியமித்தார்கள்.

## அவருடைய உயிர்த்தெழுதலும் பரமேறிப்போகுதலும்

வாரத்தின் முதல்நாளில், இயேசு மரித்தோரிலிருந்து (உயிரோடு) எழுந்தார்! குறிப்பிட்ட சில பெண்களுக்கு தரிசனமாகி, பின்பு சீஷர்களில் இரண்டுபேர் எம்மாவூருக்குப் போகிற வழியிலும், பூட்டப்பட்ட அறையில் அப்போஸ்தலருக்கும், மற்றவர்களுக்கும், ஒரே நேரத்தில் ஐநூறுக்கு மேற்பட்டவர்களுக்கும் தரிசனம் தந்தார். உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாள் வரைக்கும், தம்மை நிச்சயமாக உயிரோடிருக்கிறவராக காண்பித்தார்.

பூமியிலிருந்து போவதற்கு முன், இயேசு அப்போஸ்தலர்களை தன்னிடமாய் வரவழைத்து, பிரதான ஊழிய கட்டளையைக் கொடுத்து: "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்றார் (மாற்கு 16:15, 16). இவைகளைச் சொல்லி கொஞ்சநேரத்தில், இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அப்போஸ்தலர்கள் ஆச்சரியத்தோடே அவர் சென்றதை பார்த்துக் கொண்டிருக்கையில், வெண்மையான வஸ்திரம் தரித்திருந்த இரண்டுபேர் அப்போஸ்தலர்களுக்கு முன்பாக நின்று இயேசு அவர்களுடைய கண்களுக்கு முன்பாக எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்று சொன்னார்கள் (நடபடிகள் 1:9-11).

## அவரது இரட்சிப்பிற்கான ஏற்பாடு

பிறகு, இயேசுவின் போதனையைத் தொடர்ந்து (நடபடிகள் 1:7, 8), அப்போஸ்தலர்கள் எருசலேம் பட்டணத்துக்குப் போய் பரிசுத்த ஆவி குறித்த வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்தார்கள், அவர் வரும்போது அவர்களை சகல சத்தியத்துக்குள்ளாகவும் வழிநடத்தவிருப்பதாக சொல்லப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேல் இறங்கினார். அக்கினிமயமான பிளவுபட்ட நாவுகள் போல் அவர்களுக்குக் காணப்பட்டது, அவர்கள் கற்றிராத வேறு பாஷைகளிலே பேசத் துவங்கினார்கள். ஒரு திரளான கூட்டம் அவர்களுக்கு முன் கூடி வந்தார்கள், பேதுரு முதல் சுவிசேஷப் பிரசங்கத்தை செய்தார். பேதுரு தன்னுடைய யூதர்களின் கூட்டத்தில், அற்புதங்களை நடப்பித்தவரும், மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரும், இப்போது பரலோகத்தில் மகிமைப்பட்டுக் கொண்டிருப்பவருமாகிய இயேசுவை (முன்பு) கொலைசெய்தார்கள் என்று சொன்னார். இது அவர்கள் உரத்த சத்தமாய் “நாங்கள் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்க வைத்தது. பேதுரு அவர்களுக்கு மறுமொழியாக, “நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்” என்று சொன்னார் (நடபடிகள் 2:38). அவருடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் கீழ்ப்படிந்தார்கள்; அந்த நாளிலே மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள், அவர்களை கர்த்தர் தமது சபையிலே சேர்த்துக் கொண்டார்.

சபை துவங்கப்பட்ட நாள்முதல் இந்த வரலாற்றுக் கதை சந்தேகத்துக்கு இடமின்றி வருடங்களினூடே ஏராளமான முறை மறுபடியும் மறுபடியும் சொல்லப்பட்டது. சுவிசேஷப் பிரசங்கியார்கள் தங்களின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் பாவங்களைச் சுட்டிக்காட்டினார்கள்; கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல், பரலோகத்தில் மகிமைப்படுதல் ஆகியவைகளைச் சொன்னார்கள்; பிறகு கிறிஸ்துவின் மரணத்தினால் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டதை முன்வைத்தார்கள். அவர்கள் விசுவாசிக்க வேண்டும், மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கோரப்பட்டார்கள். திரளான பேர் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்கள் என்று மட்டும் மாறினார்கள், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களானார்கள்.

## அவரது மறு வருகை

கிறிஸ்துவைப் பற்றிய கதை அத்துடன் முடிவதில்லை, தமது சபை ஸ்தாபிக்கப்பட்டதோடோ முடிந்துவிடவில்லை. அல்லது அவருடைய சுவிசேஷத்தை பிரசங்கித்ததோடு முடிந்துவிடவில்லை. ம ாறாக, எதிர்காலத்திற்கான திட்டத்தையும் தன்னுள் கொண்டிருக்கிறது. கிறிஸ்து மறுபடியும் வருகிறார்! இதே இயேசுவைக் கொண்டு தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அவர் பாவிகளை இரட்சிக்கும்படிக்கு ஒரு முறை வந்தார்; அவர்களை நியாயத்தீர்க்கும்படிக்கு அவர் மறுபடியும் வருவார். அவரது இரட்சிப்பை ஏற்றுக் கொண்டவர்கள், நித்தியத்திற்கும் பரலோகத்தில் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்; அவருடைய

*இரட்சிப்பை புறக்கணித்தவர்கள் நித்திய நரகத்துக்கு உள்ளாகியிருப்பார்கள். கிறிஸ்து மறுபடியும் வரும்போது, அவர் அனைத்து மனுஷர்களையும் நியாயந்தீர்ப்பார்!*

## முடிவுரை

இப்படிப்பட்ட ஒரு பிரசங்கத்தைத்தான் பிலிப்பு எத்தியோப்பியா மந்திரிக்கு இயேசுவைக் குறித்து சொன்ன போது பிரசங்கித்திருக்க வேண்டும். *நம்முடைய கர்த்தருடைய இந்த வரலாற்றுக்கதை அவனுடைய மனதை நெகிழச் செய்தது போல உங்களையும் நெகிழ்வடையச் செய்துள்ளதா? தேவனுடைய குமாரனுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று உணருகிறீர்களா? இயேசுவைக் குறித்த நற்குணம் அன்பின் இரக்கமும் பற்றிய சிந்தை அவரை நீங்கள் பின்பற்ற வேண்டுமென விரும்பச் செய்கிறதா? இயேசுவின் மரணத்தைக் குறித்த சிந்தை உங்கள் சுயக் குற்றங்களைக் குறித்து வெட்கமடையச் செய்கிறதா? அவர் எந்த நிமிடமும் வரலாம் என்கிற முன் அறிவிப்பு நியாயத்தீர்ப்பு நாளிலே கர்த்தரைச் சந்திக்க உங்களை ஆயத்தமாக்க செய்கிறதா? இருப்பின் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியுங்கள். கர்த்தரில் விசுவாசம் வையுங்கள், அவரை அறிக்கையிட வெட்கப்படாதீர்கள், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள், பிறகு ஞானஸ்நானம் பெறுங்கள். தண்ணீர் இருக்கிறது. நீங்கள் ஞானஸ்நானம் பெறத் தடையென்ன?*